Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

R S Polyclinic

# நடிகை கீர்த்தி சுரேஷ் பிறந்தநாளை முன்னிட்டு வெளியான ‘அக்கா’ டீசர்!



சென்னை 18, அக்டோபர் 2026: நெட்ஃபிளிக்ஸ் மற்றும் யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் உருவாகி யிருக்கும் ‘அக்கா’ இணையத்தொடர் அக்டோபர் 30 அன்று வெளியாகிறது. நடிகை கீர்த்தி சுரேஷின் பிறந்த நாளை முன்னிட்டு இதன் டீசர் வெளியாகி யுள்ளது. இதில் கீர்த்தி சுரேஷ் பவானியாகவும், ராதிகா ஆப்தே ருத்ரா வாகவும் அறிமுகமா கின்றனர். பெர்னூரு பாரம்பரியமும் அதை விட அதிகமாக பகை யும் கொண்ட இடம். இங்கு ஆட்சி செய்யும் பெண்கள் யாருக்கும் அடிபணிவதில்லை. மாறிவரும் அதிகாரப் போட்டிகள் மற்றும் கொழுந்துவிட்டெரி யும் பகைமைகளால் உருவான பெர்னூரு ராஜ்ஜியத்தின் மையமே இந்த இரண்டு பெண்கள் தான்.

யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் உருவாகி யிருக்கும் ‘அக்கா’, பெண்களை மைய மாகக் கொண்ட பிரம் மாண்டமான கேங் ஸ்டர் கதை. இத் தொடரை எழுதி, இயக்கியிருக்கிறார் அ றிமுக இயக்குநர் தர்மராஜ் ஷெட்டி. 1980-களின் பின்னணி யில் உருவாகியிருக்கும் ‘அக்கா’, தலைமுறை தலைமுறையாகப் ª ப ண் க ள £ ல் கட்டமைக்கப்பட்டு, ஆளப்பட்டு, பாதுகாக் கப்பட்ட பெர்னூரு என்ற கற்பனை உலகத் தை பார்வையாளர் களுக்கு அறிமுகப் படுத்துகிறது.

தனது பிறந்தநாளை முன்னிட்டு ‘அக்கா’ தொடரின் டீசர் வெளியானது மற்றும் தொடரின் அனுபவம் குறித்து கீர்த்தி சுரேஷ் பகிர்ந்து கொண்ட தாவது, “என்னுடைய பிறந்தநாளன்று ‘அக்கா’ டீசர் வெளியிட்டிருப் பது ரொம்பவே ஸ்பெஷல். இதுவரை நான் நடித்த கதாபாத் திரங்களிலேயே மறக்க முடியாதது பவானி தான். ராதிகாவுடன் இணைந்து பணியாற்றி யது மிகவும் மகிழ்ச்சி யாக இருந்தது. எங்க ளுடைய கதாபாத்திரங் கள் கதைக்கு சுவாரஸ்ய மான பல பரிமாணங் களை தரும். நெட் ஃபிளிக்ஸ் மற்றும் யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர் டெயின்மென்ட் நிறுவனங்களுடன் நான் இணைந்து பணியாற் றும் முதல் தொடர் ‘அக்கா’. இந்தக் கதை யின் தனித்துவமும், அதன் உலகமும்தான் என்னை ஈர்த்தது. நிச்சயம் பார்வையாளர் களுக்கும் இது பிடிக் கும் என நம்புகிறேன்” என்றார்.

நடிகை ராதிகா ஆப்தே பகிர்ந்து கொண்டதாவது, “‘அக்கா’ தொடரின் வெளியீட்டுத் தேதி அறிவிப்பும் டீசர் வெளியீடும் கீர்த்தியின் பிறந்தநாளன்று வெளி யிட்டிருப்பது மகிழ்ச்சி. நான் நடித்திருக்கும் ருத்ரா கதாபாத்திரம் மிகவும் சுவாரஸ்ய மானது. அவள் தனது கொள்கைகளால் வழி நடத்தப்படுபவள். தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையே கேள்விக் குள்ளாக்கும் இயல்பும் அவளுக்கு உண்டு. கதாபாத்திரங்களின் சிக்கலான தன்மையும், அவர்களின் மாறுபட்ட கண்ணோட்டங்களால் உருவாகும் பதற்றங் களும்தான் என்னை இந்தத் தொடரில் நடிக்க சம்மதிக்க வைத்தது.

கடந்த பல ஆண்டு களாக நெட் ஃபிளிக் ஸ்டன் இணைந்து பணியாற்றி வருகிறேன். இதில் ‘அக்கா’ மறக்க முடியாத தொடர். சுவாரஸ்யமான இந்தக் கதையை யஷ் ராஜ் ஃபிலிம்ஸ் என்டர் டெயின்மென்ட் நிறு வனம் தயாரித்துள்ளது. பார்வையாளர்களின் விமர்சனங்களுக்காக ஆவலுடன் காத்திருக் கிறேன்” என்றார்.

---



---